தார்கள்? மேலும் ரூபாய் ஒரு லட்சம், இரண்டு லட்சம் கூடக் கொடுக்காத இடங்களில் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் படுகின்றன. இப்பொழுது நாங்கள் ரூ. 3 லட்சத்திற்கு மேலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, இங்கே ஒரு ஹாஸ்டல் கட்டடம் ஆரம்பிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கடலூரைப் பொறுத்தமட்டில் அதிகச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி ஆரம்பிக்காமல் இல்லை, கல்லூரி நடக்கிறது. மேலும் புது வகுப்புகள் ஆரம்பிப்பதற்கும் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ கனம் உறுப்பினர் செங்கற்பட்டுக் கல்லூரியைப் பற்றிச் சொன்னார். செங்கற்பட்டைப் பொறுத்தவரையில் ரூ. 5 லட்சத்திற்கு ஒரு பைசா கூடக் குறையவில்லை. கனம் உறுப்பினர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். வேறு எந்த மாவட்டத்திலும் கூட ரூ. 5 லட்சத்திற்குக் குறைவாக வசூலிக்கப்படவில்லை, ஏதோ ஒன்றிரண்டு இடங்களைத் தவிர. ஆனால், செங்கற்பட்டைப் பொறுத்தவரையில் ரூ. 5 லட்சம் பூராவும் வந்துவிட்டது.

திரு. ம. கமலநாதன்: முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் தர்மபுரி எப்படி பின்தங்கிய பகுதி என்பது. கிருஷ்ணகிரியில் அதற்கு மேலே பணம் வசூலிக்க முடியாது என்ற சூழ்நிலையை நன்றாக உணர்ந்து, எங்களை ரூ. 5 லட்சம் வசூலிக்கவேண்டும் என்று வற்புறுத்தாமல், கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது சரியல்ல. மேலும் பிரயத்தனம் செய்து கனம் உறுப்பினர் அவர்களும், மற்றவர்களும் பொது மக்களும் எதிர்பார்க்கிற அளவுக்கு, வாக்குறுதி அளிக்கப்பட்ட அளவுக்கு நிதி அளிக்கவேண்டும். தர்மபுரி கல்லூரி மேலும் மேலும் விருத்தி அடைவதற்கு உரிய வகையில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

***240 கேள்வி.—திரு. கரு. சீமைசாமி:** கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிதாகக் கல்லூரியில் சேரும் மாணவர்களிடமிருந்து அரசியலில் ஈடுபடமாட்டேன் என்ற உறுதி மொழி பெற வேண்டுமென்று கல்லூரிகளுக்கு அண்மையில் அரசாங்கம் உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No such instructions have been issued.

(b) Does not arise.